20th March 1961]

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, சிறு தொழில் வளர்ச்சிக்காக எவ்வளவு இரும்பு கோட்டா தேவைப்படுகிறது ? எத்தனை தொழிற்சாலைகள் இப்பொழுது இயங்கி வருகின்றன ? எத்தனை லைசென்ஸ்கள் நீக்கப்பட்டுள்ளன ? பொதுவாக இது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்தத் தொழிலை நடத்துபவர்களின் தேவைகளை கண்காணிக்கும்போது அவர்கள் மிகவும் குறைவாக கணக்கெடுக்கிறார்கள். ஆகவே அவர்கள் தேவைகள் பூராவையும் கொடுப்பதற்கு அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : ஒவ்வொரு தொழிற்சாலைக்கும் எவ்வளவு ரேடட் கபாசிடி என்று கவனிக்கவேண்டும். என்சினியரிங் தொழிலைப் பற்றி தெரிந்தவர்கள், மேல் படிப்பு இல்லாதவர்கள்தான் தொழிலை நடத்துகிறார்கள். அவர்கள் கொஞ்சம் அதிகமாகவே கேட்கிறார்கள். அப்படி அதிகமாக கேட்டால் தான் பாதியாவது கிடைக்கும் என்று கேட்கிறார்கள். அதனால் இன்ப்லேடட் டிமான்டாக போகிறது. ராஜ்ய அதிகாரிகள் அவர்களுக்கு மொத்தம் எவ்வளவு தேவை என்று பரிசீலனை செய்து கணிக்கிறார்கள். அப்படி கணிக்கின்ற அளவும் கொடுக்க முடிவதில்லை, காரணம் நம் நாட்டிலே பற்றாக்குறை இருப்பதனால்தான்.

Corporation vehicles (Tax)

* 947 *Q*.—SRI S. M. ANNAMALAI : கனம் மின்சார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை கார்பொரேஷனுக்கு சொந்தமான மோட்டார் வாகனங்களுக்கு வரி வசூலிக்கப்படுவதை ரத்து செய்யவேண்டுமென்று கார்ப்பொரேஷன் கோரியதா ?

(இ) அப்படியானால், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

THE HON. SRI V. RAMAIAH : (அ) Yes, Sir.

(இ) The request was rejected.

SRI S. M. ANNAMALAI : இப்பொழுது கார்பொரேஷனுக்குக் கொடுக்கப்பட்ட பாதி ரூபாய் போதவில்லை. ஆகையால் இதையாவது தள்ளிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்களா ?

THE HON. SRI V. RAMAIAH : தள்ளிக் கொடுப்பதனால் பாதி வசதி ஒன்றும் வந்துவிடாது. இதற்காக தனியாக மான்யங்கள் கொடுக்கப்படுகின்றன. இந்த வேலை வந்தால் மாகாணம் பூராவும் பரிசீலிக்கப்படும். சென்னை நகர சபைக்கு மட்டும் அரசாங்கம் சலுகை காட்ட முடியாது.

SRI K. ANBAZHAGAN : இந்த மோட்டார் டாக்ஸ் ஒரு காலத்தில் கார்பொரேஷனுக்குரியதாக இருந்ததை சென்னை அரசாங்கம் வசூலிக்கிறது. இதனால் 10 ஆண்டு காலமாக ஒரு நன்மையும் ஏற்படவில்லை. இப்போதாவது கார்பொரேஷன் மோட்டார்களுக்கு மாத்திரம் இந்த வரி விதி விலக்கு அளிக்கப்படுமா ?

THE HON. SRI V. RAMAIAH : இது 1931-வது வருஷத்திலே முடிவு எடுக்கப்பட்டது. இது கார்பொரேஷனுக்கு மட்டுமல்லாமல் சென்னை ராஜ்யத்தில் உள்ள எல்லா ஸ்தல ஸ்தாபனங்களுக்கும் எப்படி பங்கு கொடுப்பது என்ற முறையிலே கொடுத்திருக்கிறது. இதனால் பல கஷ்டங்கள் நிர்வாகத்தில் ஏற்பட்டன. அப்போதைக்கப்போது கொஞ்சம் முக்கியத்துவம் கொடுத்து அந்தப் பாதையை முதல் முதலாக எடுத்துக்கொள்ளுகிறோம். அரசாங்கம் கடனாவது கொடுத்து இந்த ரோட்டுகளைப் போட

வேண்டுமென்று சொல்லுகிறார்கள். இந்தப் பிரச்னைக்கும் கேள்வியிலே உள்ள பிரச்னைக்கும் சம்பந்தம் ஒன்றும் கிடையாது. உரிமை ஒன்றும் பறிபோக வில்லை. இதன் மூலமாக கொடுக்கப்படுகிற பணம் வருஷத்திற்கு 2 லட்சம் ரூபாய் ஆகிறது. வேண்டாமென்று சொல்லிவிட்டால் அவர்களுக் குத்தேவையான பணம் எப்போது தேவையோ அப்போது கொடுக்கிறோம்.

Agricultural loans (rate of interest)

*948.*Q.*—Sri A. VEDARATHNAM : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) விவசாய கடன்களுக்கு வட்டி விகிதத்தைக் குறைக்கவேண்டு மென்று நில அடமான பாங்கு மகாநாட்டில் வற்புறுத்தப்பட்டதா ?

(இ) அதன்பேரில் அரசாங்கம் எடுத்துக்கொண்டிருக்கும் நடவடிக்கை என்ன ?

The Hon. Sri R. VENKATARAMAN : (அ) Yes, Sir.

(இ) The proposals are under the consideration of Government.

Sri A. VEDARATHNAM : இப்போது அரசாங்கம் விவசாயிகளிட மிருந்து என்ன வட்டி வசூலிக்கிறார்கள். இப்பொழுது கொடுக்கப்படும் மார்ஜினை கொஞ்சம் குறைத்துக்கொண்டு வசூலிக்க முன் வருவார்களா ?

The Hon. Sri R. VENKATARAMAN : நில அடமான பாங்கு பார்த்தே $6\frac{3}{4}$ சத விகிதம் மக்களிடத்தில் வசூல் செய்கிறது. $\frac{1}{2}$ சத விகிதம் குறைக்கவேண்டுமென்று மாநாட்டிலே தீர்மானம் போட்டு கேட்டிருக்கிறார் கள். $\frac{1}{2}$ சத விகிதம் குறைப்பதற்கு உத்தியோகஸ்தர்கள் சம்பளத்தை அவர்களே ஏற்றுக்கொள்ளவேண்டுமென்ற கருத்தை தெரிவித்தார்கள். சர்க்கார் சம்பளம் பூராவையும் ஏற்றுக்கொண்டாலும்கூட 9 லட்சம் ரூபாய் இப்போது உதவி வரும். $\frac{1}{2}$ சத விகிதம் குறைத்தால் 24 லட்சம் ரூபாய் மேற்கொண்டு குறைந்துவிடும்.

Settlement Inspectors (Thanjavur)

*949 *Q.*—Sri M. P. SARATHI : கனம் ரெவின்யூ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960-ல் தஞ்சை செட்டில்மெண்ட் பிரிவில், செட்டில்மெண்ட் இன்ஸ்பெக்டராகப் பணியாற்ற அரசாங்கச் செலவில் எத்தனை தற்காலிக ஊழியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது ?

(இ) பயிற்சி பெற்ற ஊழியர்கள் வேலையின்மை காரணமாக நிறுத்த பட்டுள்ளனரா ?

(உ) பயிற்சி பெறாத ஊழியர் பணி புரிகின்றனரா ?

(எ) (இ), (உ) இனங்களில் முறையே எத்தனை பேர் ?

The Hon. Sri M. A. MANICKAVELU : (அ) No temporary Settlement Inspector was trained at Government cost in the year 1960 to serve in Settlement Party No. III, Thanjavur.

(இ) No, Sir.

(உ) & (எ) Yes, Sir. There are 70 untrained Settlement Inspectors in Settlement Party No. III, Thanjavur. They are not put on field work.